
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1222


எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ஸ்டாலின் சார் ஆகமுடியுமா விஜய் ப்ரோ?

**எதற்கெடுத்தாலும் 'ஸ்டாலின் சாரா, விஜய்யா?' என்று கேள்வி எழுப்பும் 'சோஃபா மாடல்' முதலமைச்சர் விஜய் அவர்களே... இந்த சிறு ஒப்பீட்டைப் பாருங்கள்...**

| ஸ்டாலின் சார் | விஜய் ப்ரோ |
|---|---|
| எதிர்க்கட்சி ஆனபோதும் தன் எம்.எல்.ஏ.க்கள் மீது நம்பிக்கையில்லாமல் ரிசார்ட்டில் அடைத்து வைக்கவில்லை. | ஆளும்கட்சி ஆனபோதும் தன் எம்.எல்.ஏ.க்கள் மீது நம்பிக்கையில்லாமல் ரிசார்ட்டில் அடைத்து வைத்தார். |
| எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்காலத்தில் அ.தி.மு.க.வில் உள்கட்சிப் பிரச்சினை வலுவாக இருந்தபோதும் குதிரைபேரம் நடத்தி ஆட்சியைக் கைப்பற்ற முயலவில்லை. | 'அல்லுசில்லு', 'மற்றும் பலர்' என்று சொல்லிக்கொண்டே அ.தி.மு.க – அ.ம.மு.க எல்.எல்.ஏ.க்களிடம் குதிரை பேரம் நடத்தினார். |
| எப்போதும் மக்களைச் சந்திக்கிறார், மக்களுடன் இருக்கிறார். | 'மக்களைச் சந்திக்கவிடாமல் சதி' என்று ஸ்டாலின் சார் மீது பழியைப் போட்டவர், முதலமைச்சர் ஆனபிறகும் அதே 5,000 பேரைத்தான் சந்திக்கிறார். |
| முதல் கையெழுத்தாக விடியல் பயணத்தை அறிவித்து வெற்றிகரமாக நிறைவேற்றினார். | 'சிங்கப்பெண் படை'யை அறிவித்து நிதியும் ஒதுக்கவில்லை, திட்டமும் தொடங்கவில்லை. '200 யூனிட் மின்சாரம் இலவசம்', 'பயிர்க்கடன் தள்ளுபடி' அறிவிப்பிலும் மோசடிகள். |
| பத்திரிகையாளர்களைச் சந்திக்கவும் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும் எப்போதும் தயங்கியதில்லை! | ண்ணா, நமக்கு பத்திரிகையாளர்னாலே அலர்ஜிங்ணா! |
| வெற்றி வாய்ப்பை இழந்தபோதும் உடனடியாக கொளத்தூர் தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி கூறினார். 'தவறான முடிவெடுத்துவிட்டோம்' என்று கலங்கியவர்களுக்கு ஆறுதல் சொன்னார். | மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் இடித்துரைத்த பிறகுதான் திருச்சி கிழக்கு மக்களைச் சந்திக்கச் சென்றார். இன்னும் பெரம்பூர் மக்களைச் சந்திக்கவே இல்லை. |
| ஒரு கூட்டணிக் கட்சித் தலைவராக அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்து தொடர் வெற்றிகளைப் பெற்றார். த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளிப்பது என்று முடிவெடுத்த பிறகும், (ஓடுகாலி துரோக காங்கிரஸைத் தவிர) மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் கூட்டணிக் கட்சிகள் சந்திக்கும் தலைவராக இருக்கிறார். | கூட்டணிக்கே இன்னும் பெயர் வைக்கத் துப்பில்லை. ஒரு அனாமத்து காங்கிரஸ்காரர் அவராகவே கூட்டணிக்குப் பெயர் வைத்து, இடதுசாரி கட்சிகளிடம் கண்டனங்களைச் சம்பாதித்தார். அதற்கும் வாய் திறக்கவில்லை. |
| எதிர்க்கட்சித் தலைவர் என்றாலும் முதலமைச்சர் என்றாலும் சட்டசபையில் எப்போதும் சிங்கம்போல செயலாற்றினார். | கடுப்பேத்தினாலும் கம்முனு இருப்பார், உசுப்பேத்தினாலும் உம்முனு இருப்பார். மொத்தத்தில் 'சிம்ப்ளி வேஸ்ட்' ப்ரோ! |

**உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகாது; டப்பாங்குத்து ஆடினாலும் வான்கோழி மயில் ஆகாது; மின்னி மறையும் மின்மினிகள் சூரியனின் வெளிச்சத்துக்கு எப்போதும் ஈடாகாது.**

## இனிமே எல்லாம் இப்படித்தானோ!



தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்து ஒரு மாதம் ஆன பின்பும் ஆக்கபூர்வ அறிவிப்புகளோ திட்டங்களோ இதுவரை வரவில்லை. ஆனால், திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள், சாதனைகளுக்கு ஸ்டிக்கர் ஒட்டும் வேலை மட்டும் சிறப்பாக நடக்கிறது. இதைக் கிண்டல்செய்து பதிவிட்டுள்ளார், நகைச்சுவை நடிகர் வெங்கடேஷ் ஆறுமுகம்.

**புது கிரிக்கெட் ரூல்**

"ஒரு டீமில் 11 வீரர்கள். ஒரு ஓவருக்கு 6 பந்துகள், 22யார்டு நீளத்தில் பிட்ச். இந்தப் பக்கம் 3 ஸ்டம்ப் அந்தப் பக்கம் 3 ஸ்டம்ப், வீசுவதற்கு 2 பந்துகள். பகல் ஆட்டம் என்றால் சிவப்பு நிற பந்து. இரவு நேர ஆட்டம் என்றால் வெள்ளை நிறப் பந்து. பவுலர் கால் க்ரீஸுக்கு வெளியே போனா அது நோ பால். பேட் பிடிப்பவர் அடிக்க முடியாம விலகி வெளியே வீசுனா அது வைடு.

பேட்டர் அடிக்கிற பந்து தரையில் பட்டு எல்லைக்கோடு கடந்தா, அது 4 ஓட்டம். தரையில் படாம தாண்டி விழுந்தா 6 ஓட்டம். அப்புறம் பந்தை காலில் வாங்கி அவுட் ஆனா, அதுக்குப் பேரு LBW. ஏறிவந்து ஆடும்போது விக்கெட்டுக்குப் பின்னால் இருப்பவர் பந்தைப் பிடித்து ஸ்டம்பில் தட்டிட்டா, அது ஸ்டம்பிங். பந்து தரையில் படாமல் நேரடியா பிடிச்சுட்டா அது கேட்ச் அவுட்.

முக்கியமா பேட் பிடிக்கிறவர் பேட்ஸ் மேன், பந்து வீசுறவர் பவுலர், ஸ்டம்புக்குப் பின்னே நிற்பவர் கீப்பர், ஃபீல்டு பண்றவர் பீல்டர், நடுவர் பேரு அம்பயர் இதெல்லாம் தான் புதிய ரூல். ஏங்க இந்த ரூல் எல்லாம்தான் கிரிக்கெட்டில் ஆல்ரெடி இருக்குதுங்களே, இப்ப எதுக்கு அதையே நீங்களும் சொல்றீங்க?

அதெல்லாம் தெரியாது! நாங்களும் சொல்லுவோம். புது மாற்றம் வந்தாச்சு. இந்த மாற்றத்துக்குத் தயாரா இருந்துக்கோங்க. இனி எல்லாம் இப்படித்தான். பீ கேர்ஃபுல்" என்று கலாய்க்கிறார் வெங்கடேஷ் ஆறுமுகம்.

## ஃப்ளாஷ்பேக்



வி.எஸ்.வெங்கடாசலம்



### தலைவருடன் நின்றோம்!

1993-ஆம் ஆண்டில் வைகோ அவர்கள் கழகத்தை விட்டு வெளியேறி இருந்த நேரத்தில், திருச்சியில் நடைபெற்ற கழகக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள, தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அப்போது, கழகத்தினர் திரளாகக் கூட்டத்தில் கலந்துகொண்டதுடன், மேடையேறி தலைவரைப் பார்த்து, வாழ்த்து முழக்கமிட்டோம். அப்படி தலைவருக்கு மரியாதை செய்த நேரத்தில் எடுக்கப்பட்ட படம்.

**– வி.எஸ்.வெங்கடாசலம், பாலக்கரை பகுதி, திருச்சி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


## வலையோசை



■ Prabhu R

எது சுயமரியாதை?

ஒரே நாள், ஒரே நிகழ்ச்சி, வேறு வேறு இடங்கள். TVK-ல் சேர முன்னாள் அ.தி.மு.க.வினர் ஒரு மணி நேரத்துக்கும் மேலாகக் கதவு திறக்கப்படாமல், பனையூரில் மொட்டை வெயிலில் நின்று கொண்டிருக்கிறார்கள். அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில், பல இளைஞர்கள் உள்பட மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணைய வசதியாக அமர்ந்திருக்கிறார்கள். சரியாக, குறிப்பிட்ட நேரத்தில் தி.மு.க. தலைவர் நிகழ்ச்சியைத் தொடங்கி அனைவரையும் ஒவ்வொருவராக மேடையில் நேரில் சந்திக்கிறார். எது சுயமரியாதை?




## ஸ்கேன் ரிப்போர்ட்




## கருவூலம்

### அண்ணாவின் கலையுலகத் தொடர்பு!

1940-களில் 'உதயணன்' அல்லது 'வாசவதத்தா' கதையைத் திரைப்படமாக மாற்றி கதை- உரையாடல் எழுதுவதற்கு, பேரறிஞர் அண்ணாவுக்கு முதல் வாய்ப்பு கிடைத்தது. டி.வி.நாராயணசாமியை, நாயகராகப் போடுவதாக இருந்தால் எழுதித் தருகிறேன் எனக் கூறினார் அண்ணா. அந்த அளவுக்கு அண்ணாவிடம் ஈர்ப்பு கொண்ட ஒரு நடிகராக, 'நடிகமணி' டி.வி. நாராயணசாமி திகழ்ந்தார். அண்ணாவுக்குக் கலையுலகத் தொடர்பு ஏற்படக் காரணமாக இருந்தவரும் அவர்தான்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900